## ரூ.3 கோடியில் 'கலைஞர் கலையரங்கம்' திறப்பு!

# தமிழ்நாட்டு மாணவர்கள் 100 சதவிகிதம் உயர்கல்வி பெற நம் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறார்!

## பெரும்பாக்கம் அரசு கலைக் கல்லூரி விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,ஆக.13-**

**சென்னை, பெரும்பாக்கத்தில் இயங்கி வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 'கலைஞர் கலையரங்கத்தை' நேற்றுமுன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ``இன்றைக்கு தமிழ் நாட்டில், கிட்டத்தட்ட 75 சதவிகிதம் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. ஆனால், இது போதாது நமக்கு. அந்த 75 சதவிகிதம் 100 சதவிகிதமாக வேண்டும்” என்று அவர் குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:**

நம் மாநிலங்களவை உறுப்பினர் அண்ணன் வில்சன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி, மேம்பாட்டு நிதி, அதுமட்டுமில்லாமல் சென்னை மாநகராட்சி பெருநகர வளர்ச்சிக் குழும நிதி ஆகியவற்றின் மூலம் இந்தப் பெரும்பாக்கம் அரசுக் கல்லூரியில் மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, கலைஞர் கலையரங்கத்தை உங்களுடன் சேர்ந்து திறந்து வைத்ததில், மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். எனக்கு சிறப்பான வரவேற்பு அளித்த உங்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாநிலங்களவை உறுப்பினர்

முதலில், நாம் அனைவரும் நம் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் அவர்களுக்கு நமது பாராட்டுகளைத் தெரிவித்தாக வேண்டும். ஏனென்றால், அவருக்கு ஒதுக்கப்படுகின்ற, தொகுதி மேம்பாட்டு நிதி அனைத்தும் கல்வி, விளையாட்டு மேம்பாடு, பெண்களின் முன்னேற்றம் போன்ற பணிகளுக்காகவே முழுவதையும் செலவழித்து இருக்கிறார்.

அவர் சொன்னது போல், கொளத்தூர் தொகுதியில் பள்ளிக்கூட கட்டுமானப் பணிகளுக்காக 2 கோடியே 35 லட்சம் ரூபாய், இந்தக் கல்லூரிக்காக 2 கோடி ரூபாய், சென்னையில் இருக்கின்ற ராணி மேரி மகளிர் கல்லூரிக்கு 5 கோடி ரூபாய், திருவண்ணாமலை நகரத்தில் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் ஒரு கலையரங்கம் கட்ட 1.5 கோடி ரூபாய், அதே போல் என்னுடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் ஒரு சமுதாய நலக்கூடம் கட்ட மூன்று கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார். இப்படித்தான் ஒட்டுமொத்த தொகுதி மேம்பாட்டு நிதியையும் எளிய மக்களுக்கு பயன்படுகின்ற வகையில், ஒதுக்கீடு செய்கின்ற அண்ணன் வில்சன் அவர்களுக்கு, நம் அனைவரும் சார்பாக பாராட்டுகளைத் தெரிவிக்க வேண்டும்.

### நானும் ஒரு மாணவன்தான்

இந்தக் கலையரங்கம் கட்டுவதற்கு, தனது நாடாளுமன்ற உறுப்பினர் நிதியை ஒதுக்கிய அவருக்கு மாணவ - மாணவிகள் உங்களின் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்கள் சார்பாக என்று எப்படி இவர் சொல்லலாம் என்று நீங்கள் நினைக்கலாம். உங்களைப் போல நானும் ஒரு மாணவன்தான். நான் பெருமையாகச் சொல்வேன். நான் தந்தை பெரியாரின், அண்ணல் அம்பேத்கரின், பேரறிஞர் அண்ணாவின், முத்தமிழறிஞர் கலைஞரின் மாணவன் என்ற பெருமையோடு நன்றியோடு சொல்லிக் கொள்கிறேன். இன்று 260 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழாவும் நடைபெற இருக்கிறது.

எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குப் போனாலும், கல்லூரி மாணவர்கள் உங்களைப் பார்க்கும்போது, ஒரு கூடுதல் உற்சாகம் ஏற்படுகிறது. குறிப்பாக, இந்த பெரும்பாக்கம் அரசு கலை அறிவியல் கல்லூரியின் மாணவர்கள் உங்களுடைய சக்தியே வேறு மாதிரியாக இருக்கிறது. அதற்கு எனது பாராட்டுகள். அந்த அளவிற்கு ஆரவாரத்தோடு இருக்கிறீர்கள். இன்னொரு நன்றி சொல்லியாக வேண்டும். கலைஞர் பெயரில் அமைந்து இருக்கின்ற இந்தக் கலையரங்கத்தைத் திறக்கின்ற வாய்ப்பை எனக்கு அளித்ததற்கு மீண்டும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் பார்க்கும்போது என்னுடைய கல்லூரி நாட்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. இதுபோன்ற நிகழ்ச்சி நடக்கும்போது, ஒரு கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், நீங்கள் ஏதாவது இரண்டு மூன்று வகுப்புகளை நிராகரித்து






விட்டுத்தான் வந்திருப்பீர்கள். இல்லையென்றால், தன்னார்வலர்கள் என்று சொல்லிவிட்டு வந்திருக்கலாம். ஆகவே வகுப்புகளை நிராகரித்த மகிழ்ச்சியும் சேர்ந்துதான் உங்கள் முகத்தில் எனக்குத் தெரிகிறது.

### 1300 மாணவர்கள்

கல்லூரி வாழ்க்கை எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்கு படிப்பும் முக்கியம். நீங்கள் படிப்பை மட்டும் விட்டு விடாதீர்கள். 2016-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பில், வெறும் 16 மாணவிகளுடன் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில், இன்றைக்கு கிட்டத்தட்ட 1,300 பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கல்லூரிக்கு நம் முதலமைச்சர் அவர்கள், நமது அரசு பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறது.

2021-ஆம் ஆண்டு மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 வகுப்பறைகள், இரண்டு ஆய்வுக்கூடத்துடன் நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.8.2025) பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் தொகுதி மேம்பாட்டு நிதி உள்பட 3.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கலைஞர் கலையரங்கத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன். மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், சட்டமன்ற உறுப்பினர்கள், எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, உயர் கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, பெரும்பாக்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஆ.உமாமகேஸ்வரி, அரசு உபர் அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரியின் மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

இந்தக் கல்லூரியின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும் என்று சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பில், கூடுதல் இணைப்பு கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### போராட்டமும் உழைப்பும்

இங்கு படிக்கின்ற 75% மாணவர்கள் முதல் தலைமுறைப் பட்டதாரிகளாக படிக்க கல்லூரிக்கு வருகிறீர்கள் என்று சொன்னார்கள். அதற்கு எனது வாழ்த்துகள். அதுமட்டுமல்ல, அதிகமான ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சார்ந்த பிள்ளைகள் படிக்கின்ற, சிறப்பு வாய்ந்த கல்லூரி. உங்களின் தாத்தா பாட்டிக்கு, உங்கள் அப்பா அம்மாவுக்குக் கிடைக்காத கல்வி இன்றைக்கு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது சாதாரணமாக கிடைக்கவில்லை. இதற்குப் பின் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற நம் தலைவர்களின் போராட்டமும், உழைப்பும் இருக்கின்றன. இதை உணர்ந்து படிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரங்கத்தில் இன்னொரு கூடுதல் சிறப்பு என்னவென்றால், மாணவர்களை விட மாணவிகள் அதிகமாக இருக்கிறீர்கள். இங்கு இருக்கின்ற மாணவிகள் உங்களையெல்லாம் பார்க்கும்போது, உங்களின் பெற்றோரை நினைத்தால் மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஒரு காலத்தில் பெண் பிள்ளைகளைப் படிக்கவே வைக்க மாட்டார்கள். 100 வருடங்களுக்கு முன்பு, பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதற்குக் கூட அனுமதி கிடையாது. அதையெல்லாம் எதிர்த்துப் போராடி இன்றைக்கு இந்த நிலைமை வந்திருக்கிறது. அடுத்தவன் வீட்டுக்குச் செல்கின்ற பெண்ணுக்கு கல்வி எதற்கு என்று, 50 வருடங்களுக்கு முன்பு பிற்போக்குத்தனமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை மாறி இருக்கிறது.

பெண் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்ற எண்ணம், இன்றைக்கு பெற்றோர்களிடம் அதிகமாகவே வந்திருக்கிறது. ஒரு ஆண் படித்தால், அந்தக் குடும்பத்திற்கு மட்டும்தான் உதவும். ஆனால், ஒரு பெண் படித்தால் அது ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் உதவியாக இருக்கும். ஆகவே, இங்கு இருக்கின்ற மாணவிகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும், உங்களின் அடுத்த தலைமுறைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

### 100 சதவிகிதமாக வேண்டும்

கல்விக்காக நமது திராவிட மாடல் அரசு எடுத்துக்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளால், இன்றைக்கு தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, உயர் கல்வியில் செல்கின்ற மாணவர்களின் சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 75 சதவிகிதம் மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. ஆனால், இது போதாது நமக்கு. அந்த 75 சதவிகிதம் 100 சதவிகிதமாக வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்.

குறிப்பாக, அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இந்த இரண்டு திட்டங்களிலும் தமிழ்நாடு முழுக்க மாதந்தோறும் 8 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

புதுமைப்பெண் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து நான்கு வருடத்தில், இந்தக் கல்லூரியில் மட்டும் 1,200 மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அதே போல் தமிழ்ப்புதல்வன் திட்டம் தொடங்கி, இரண்டு வருடம் ஆகிவிட்டது. இந்த இரண்டு வருடத்தில் இந்தக் கல்லூரியில் மட்டும் 500 மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை தருகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

கல்லூரி முடிந்தவுடன் வேலைக்குச் செல்ல வேண்டும் என்றால், பொதுவாக பெரிய கல்லூரிகளில் படிக்க வேண்டும் என்று சொல்வார்கள். பெரிய பெரிய கல்லூரிகளில் மட்டுமல்ல, நம் பெரும்பாக்கம் கல்லூரியில் படித்தாலும் உடனே வேலைக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையை, அந்த நிலைமையை நம் முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறது.

### விளையாட்டு வீரர்கள்

குறிப்பாக, நான் முதல்வன் திட்டத்தின் மூலம் இந்தக் கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் ஆயிரம் பேருக்கு திறன் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாம் மூலமாக, இந்தக் கல்லூரியில் சேர்ந்த சுமார் 400 மாணவர்கள் இன்றைக்கு பல உலகளாவிய நிறுவனங்களில் பெரிய வேலைகளில் சேர்ந்து இருக்கிறார்கள். இங்கு இருக்கின்ற நீங்களும் அதே மாதிரியான வேலைவாய்ப்பு பெற வேண்டும் என்றால், நம் திராவிட மாடல் அரசும், நானும், முதலமைச்சர் அவர்களும் உழைத்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு உங்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். ஆகவே நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று மட்டும்தான். நன்றாகப் படியுங்கள். படிப்பில் மட்டுமல்லாமல், விளையாட்டிலும் உங்களின் கவனத்தை ஈடுபடுத்துங்கள். விளையாட்டு என்பது உங்கள் உடல் நலத்திற்கு மட்டுமல்ல, மனநலத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் மிக மிக முக்கியம். இந்தக் கல்லூரியில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் உருவாகியிருக்கிறார்கள் என்று சொல்வதைக் கேட்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இந்தக் கல்லூரியின் மாணவர் தம்பி ஆகாஷ் சென்ற வருடம் நடந்த தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்றுள்ளார். அதேபோல தங்கைகள் தாரணி, ராஜலட்சுமி, தம்பி சக்திவேல் போன்றவர்கள் சிலம்பம் விளையாட்டில் பல சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இவையெல்லாம் இந்தக் கல்லூரிக்கு மட்டுமல்ல; நம் மாநிலத்திற்கே பெருமை.

நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பாக முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை வருடம் தோறும் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இங்கே ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள் எஸ்.டி.ஏ.டி. (SDAT) இணையதளத்திற்குச் சென்று, வருகின்ற 16-ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்யுங்கள். உங்கள் கல்வித் திறமையையும், பன்முகத் திறமையையும் தொடர்ந்து வளர்த்துக்கொண்டே இருங்கள்.

### மறக்க முடியாத நினைவுகள்

உங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாணவர்களான உங்களின் முன்னேற்றத்திற்கும் நம்முடைய திராவிட மாடல் அரசு என்றைக்கும் துணை இருக்கும். எந்தக் கல்லூரியாக இருந்தாலும் அங்கு இருக்கின்ற கலையரங்கத்திற்கும், மாணவர்களுக்கும் ஒரு சென்டிமென்ட் தொடர்பு இருக்கும். ஏனென்றால், வகுப்பறைகளை விட, உங்களுக்கு பல மறக்க முடியாத நினைவுகளைத் தரப்போவது இந்தக் கலையரங்கம்தான். ஆகவே, நாங்கள் இன்று திறந்து வைத்திருக்கின்ற இந்தக் கலையரங்கமும் உங்களுக்குப் பல மறக்க முடியாத நினைவுகளை நிச்சயமாகத் தரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இன்றைக்கு 262 மாணவர்கள் பட்டம் பெற இருக்கிறீர்கள். இன்றைக்கு பட்டம் பெறுகின்ற உங்களின் எதிர்காலம், இன்னும் சிறப்பாக அமையட்டும். பட்டம் வாங்குகிறவர்கள் உட்பட, இங்கு இருக்கின்ற மற்ற மாணவர்களும் வாழ்க்கையில் பல்வேறு உயரங்களைத் தொடுவதற்கு எனது அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கோவி.செழியன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் வில்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், பிரபாகர் ராஜா, உயர்கல்வித் துறையின் அரசு செயலாளர் சங்கர் ஐ.ஏ.எஸ்., பெரும்பாக்கம் அரசு கல்லூரியின் கல்வி ஆணையர் சுந்தரவல்லி ஐ.ஏ.எஸ்., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் சினேகா ஐ.ஏ.எஸ்., கல்லூரியின் முதல்வர் முனைவர் உமா மகேஸ்வரி, ஒன்றியச் செயலாளர் வெங்கடேசன், மேடவாக்கம் ரவி, சங்கீதாபாரதிராஜன், ரவிச்சந்திரன், பாலவாக்கம் விஸ்வநாதன், வி.பி.மணி, எழில் பாண்டியன், தியாகராஜன், கிருஷ்ணகுமார், சதீஷ், ஊராட்சி மன்றத் தலைவர் சுகாசினி ரங்கராஜன், அரசு அதிகாரிகள், கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.